பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நாம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்டி

மலர்: 15] சென்னை: மார்கழி 15 (30—12—67) சனி ★ வெளியூர்: மார்கழி 16 (31—12—67) ஞாயிறு [இதழ் 165

இந்தி எதிர்ப்புக்கு இனி அணைபோட முடியாது

இந்தியத் தலைமையினருக்கு அண்ணா -- நம்பூதிரிபாடு எச்சரிக்கை

ஆட்சிமொழி சட்டம்பற்றி ஆந்திரம், கன்னடம் அதிருப்தி-- மொழிபிரச்சினையில் தென்னகம் ஒருகுவாய் இருந்திறது

"நிறைவேற்றப்பட்டிருக்கும் ஆட்சிமொழிச் சட்டம் நடைமுறைக்கு வந்தால்—அதன் இந்தி மொழி பற்றிய கொள்கை—தெற்கே எதிர்ப்பு வெள்ளத்தைத்தான் தோற்றுவிக்கும்; அதற்கு அணை போட்டுத் தடுப்பதென்பது இனியும் முடியாத காரியம்"

என, தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களும், கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடும் அண்மையில் புதுடில்லிக்குச் சென்றிருந்தபோது மத்திய அரசுக்கு எச்சரிக்கைக குறிப்புத் தந்து திரும்பியிருப்பதாக 'மெயில்' இதழின் சிறப்புச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

"இடபோது நிறைவேறியிருக்கும் ஆட்சி மொழிச் சட்டம் பற்றிக் கேரளம் மிகவும் அதிருப்திகொண்டிருக்கிறது; இந்த நிலையில், தனது அரசு இந்தி மொழிக்கு எந்த வகையிலும் ஆதரவு — ஒத்துழைப்பு அளிப்பதென்பது முடியாத காரியம்"

என முதலமைச்சர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு தெரிவித்திருக்கிறுர்.

கேரளத்தில் இனி நடக்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களை அடக்கும் நடவடிக்கைகள் எதனையும் எடுக்க விரும்பாத — முடியாத நிலையில் தனது அரசு இருப்பதாக நம்பூதிரிபாடு மேலும் கருத்துத் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

"இந்தி பேசும் மக்களுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் எவவித தீங்குகளும் வரக்கூடாது என்று போராட்டக்காரர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேம். இந்தப் பிரச்சினையில் எங்கள் அரசு, அத்தனை நிதானம் உணர்வினையும் கடைபிடிக்கிறது; இருந்தாலும், 'ஆட்சிமொழிச் சட்டத்தினுல் இந்தி பேசாத மக்களுக்குப் பாதகம் விளைவிக்கப்பட்டிருக்கிறது' என்ற உணர்வுகள் எழுவதை எங்களால் அணை போட்டுத் தடுக்க முடியவில்லை.

"தென்னகம், 'மொழிப் பிரச்சினையில் தீங்கினை அனுபவிக்கிறது; வடக்கு சரியான நீதியினை வழங்காது' என்ற உணர்வு தெற்கே இருக்கிறது; ஆந்திரமும், கன்னடமும் இந்த அனுபவத்துக்குத்தான் விரைந்து வந்துகொண்டிருக்கின்றன"

என்று இரு முதலமைச்சர்களும் எச்சரித்திருப்பதாக 'மெயில்' இதழ் நிருபர் மேலும் எழுதியுள்ளார்.

சென்னையில் அறிஞர் அண்ணா நகர்

அமைச்சர் மாதவன் தலைமையில் அமைச்சர் கருணாநிதி திறந்தார்

சென்னை, டிச. 29 —

மேற்குச் சென்னைப் புறநகரப் பகுதிக்கு, 'அறிஞர் அண்ணா நகர்' எனப் பெயரிடப்பட்டு, இன்று அதன் திறப்பு விழா நடைபெற்றது.

சுமார் 1,300 ஏக்கர் பரப்புள்ள இந்த நகரையும், இங்கரையடுத்துக் கூவம் ஆற்றில் கடடப்பட்டுள்ள பாலத்தையும் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி திறந்துவைத்தார்.

விழாவுக்கு, சட்டத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் தலைமை வகித்தார்.

விழாவுக்கு வந்திருந்தோரை, வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. பூவராகமூர்த்தி வரவேற்றுப் பேசையில், அண்ணா நகர் அமைப்புத் திட்டத்தைப் புள்ளிவிவரங்களுடன் விளக்கினுர்.

ஷேக் அப்துல்லா-- அயூபின் விருந்தினராவார்?

காஷ்மீரத்துச் சிங்கம் பாகிஸ்தானிற்குக் குடிபெயரப் போகிறதாம்!

"இந்திய அரசின் பாதுகாப்புக் கைதியாக இருந்துவருபவனும்' காஷ்மீரத்துக்கான தீர்வு காண்பதில் மாற்றுக் கருத்தினைக் கொண்டிருப்பவரும், காலஞ்சென்ற நேருவின் நெருங்கிய அரசியல்—குடும்ப நண்பருமான ஷேக் அப்துல்லா, தனக்கு முழு விடுதலை கிடைத்தவுடன் நிரந்தரமாகப் பாகிஸ்தானைத் தன் வாழ்விடமாகத் தேர்ந்தெடுக்க இருக்கிறுர்" என்று புதுடில்லிச் செய்தியொன்று யூகம் தெரிவிக்கிறது.

காஷ்மீரத்தில் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தி அதன் ஐக்கியத் தீர்வு பற்றி நிர்ணயிக்க வேண்டும் என்று கோரிவரும் மிர்ஜா அப்சல் பேக், ஷேக் அப்துல்லா வைப் புதுடில்லியில் சந்தித்து இதுபற்றி விவரித்திருப்பதாக நம்பப்படுகிறது.

அவர், தலைமையமைச்சர் இந்திராவையும் கண்டு பேசியிருக்கிருர்.

ஷேக் அப்துல்லா பாகிஸ்தானுக்குச் சென்றால், திரும்பவும் இந்தியாவுக்கு வரமாட்டார் எனத் தெரிகிறது.

'இந்த முடிவினை அவர் செயல்படுத்தினுல், அது, இந்திய அரசினருக்கு எவவிதப் புதிய சிக்கலையும் தராது' என்றும், 'ஷேக் அப்துல்லாவின் அரசியல் பெருமைதான் அதனுல் பாதிக்கப்படும்' என்றும் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

உலகத் தமிழ் மாநாட்டில் 35 நாடுகளின் பிரதிநிதிகள்

உலகத் தமிழ் மாநாட்டில் மொத்தம் 35 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். அந்தப் பிரதிநிதிகள் சார்ந்துள்ள நாடுகள் :—

1. ஆஸ்திரேலியா
2. ஆஸ்நியா
3. கானடா
4. செக்கோஸ்லேவேகியா
5. டென்மார்க்
6. பின்லாந்து
7. பிரான்ஸ்
8. ஜெர்மனி ஜெர்மனி
9. மேற்கு ஜெர்மனி
10. ஹாலந்து
11. இந்தோனேஷ்யா
12. இஸ்ரேல்
13. இத்தாலி
14. ஜப்பான்
15. கொரியா
16. மொரீஷஸ்
17. பிலிப்பைன்ஸ்
18. போலந்து
19. ருமேனியா
20. ஸ்பெயின்
21. தைவான்
22. தாய்லாந்து
23. பிரிட்டன்
24. அமெரிக்கா (யு எஸ்.ஏ.)
25. சோவியத் இரஷ்யா
26. ஹங்கேரி
27. ருசுகேவே
28. ருகெயெத்
29. தென் வியட்நாம்
29. இலங்கை
30. மலேயா
31. சிங்கப்பூர்
32. மெக்சிகோ
33. ஹாங்காங்
34. ஐ. நா. (யு என் ஒ.)

பெங்களூர் பிரதிநிதிகள்

உலகத் தமிழ் கருத்தரங்குக்கு பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தின் பிரதிநிதிகளாகத் தலைவர் வி. சந்தானம் பி.ஏ., செயலாளர் நா. நீலகண்டன் ஆகியோர் கலந்துகொள்கிருர்கள்.

உலகத் தமிழ் மாநாட்டுக்குப் பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தார் ஐந்நூறு ரூபாயை நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

இந்தி சேனை தமிழகம் வந்ததாம்!

தலைமறைவுத் தலைவரின் திடுக்கிடும் தகவல்

"ஆட்சிமொழி (திருத்தச்) சட்டம் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டவுடன் ஆரம்பிக்கப்பட்ட 'இந்தி சேனை' என்னும் வடக்கத்திய மொழி வெறியர் கூட்டத்தின் பிரதிநிதிகள் சிலர், இங்கே—தமிழகத்தில் மாணவர்கள் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது இரகசியமாக வந்திருந்து தகவல்கள் சேகரித்துச் சென்றனர்"

என்ற திடுக்கிடும் தகவல் ஒன்றினை பம்பாய் வார ஏடான 'பிளிட்ஸ்' இந்தக் கிழமை இதழில் வெளியிட்டிருக்கிறது.

இந்தி சேனையின் தலைவர் என்று கருதப்படுபவரும் தலைமறைவாகவே இருப்பவருமான 26 வயதுள்ள நரேந்திரா கலாந்திரி என்பவர், 'பிளிட்ஸ்' இதழின் லக்னோ நிருபருக்கு அளித்த பேட்டி ஒன்றில் இத்தகவலைத் தந்திருக்கிருர்.

"தேன்னக மாணவர்கள், போராட்டத்தினை எப்படி நடத்துகிருர்கள் — என்பதனை, நேர்முகமாக — ஆனுல் இரகசியமாகத் தெரிந்துகொள்வதற்காக 'இந்தி சேனை'யின் பிரதிநிதிகள் சிலர் தமிழ்நாட்டுக்குச் சென்றுவந்தது உண்மைதான்"

என அத்தலைவர் 'பிளிட்ஸ்' இதழின் நிருபரிடம் ஒப்புக்கொண்டிருக்கிருர்.

"தேன்னக மாணவர்களின் போராட்டத்திற்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்காக அந்த இரகசியப் பயணம் மேற்கொள்ளப்படவில்லை; 'ஏனெனில், அங்கே நடக்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஓர் அரசியல் கிளர்ச்சியாகும்; அது தானுகவே மறைந்துவிடும்"

என்றும் அந்தச் 'சேனை'யின் தலைவர் கூறியிருக்கிருர்.

வடக்கே, 'இந்தி வெறியர்கள்' எனப் பெயரும் புகழும் எடுத்தவர்கள்—மற்றும் ஜனசங்கம், ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகள் ஆகியனவற்றில்கூட இந்திக்கு முக்கியத்துவம் தேடித்தர முடியாது — என்று, அதிதீவிர வெறி உணர்ச்சியுடன் கடந்த நவம்பர் மாதம் துவங்கப்பட்ட அமைப்பு இந்த 'இந்தி சேனை'!

வடக்கே 'ஆங்கில எதிர்ப்பு' என்ற போர்வையில் நடக்கும் அரா ஜகங்களில் பெரும்பகுதி, இந்தச் சேனையினரின் நடவடிக்கைகளே ஆகும்!

'ஆங்கில எதிர்ப்பு மாணவர் படை' ஒன்று இங்கே தமிழகம் வரப் போவதாக ஒரு நாவல் வெளியாகியிருப்பதும், 'அதுபோல் ஒரு 'படை' வருவது அரமநிர்க்கு குந்தகம் விளைவிக்கும்' எனச் சென்னை நகரப் பல்கலைக்கழக மாணவர் அமைப்புத் தலைவர் செப்பி விடுத்திருப்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

என்னிக்கோ-- என்னிக்கோ-- இம்பிச்சி பாவா!

கள்ளிக்கோட்டை நகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அனைத்திந்திய ஜனசங்க மாநாட்டுக்கெனப்போதுமான போக்குவரத்து வசதிகள் தராத கேரள போக்குவரத்து அமைச்சர் இம்பிச்சி பாவாவுக்கு எதிராக, 'என்னிக்கோ என்னிக்கோ—இம்பிச்சி பாவா' என்று—தங்கள் ஊர்வலத்தின் பலத்தைக் காட்டி, ஜனசங்கத் தொண்டர்கள் நடந்து சென்றிருக்கிருர்கள்!

ரோம் நகரில் ஒரு ரோமானியனைப்போல...!

பால்ராஜ் மதோக், ஜெகன்னாத ராவ் ஜோஷி, நன்ஜி தேஷ்முக் ஆகியோர் உள்ளிட்ட பல ஜனசங்கத் தலைவர்களும், தொண்டர்களும், கள்ளிக்கோட்டையில் நடைபெற்ற தங்கள் கட்சி மாநாட்டில், கேரள முறையில், 'முண்டு' அணிந்து காட்சியளித்தனர்! ஜனசங்க மாநாட்டின் பெரும் பகுதி பிரதிநிதிகளும் வடக்கத்தி மாநிலத்தவராக இருந்தும், தங்கள் 'குர்தா'வை விட்டு விட்டு, 'முண்டு' அணிந்து காட்சி தந்தது, 'ரோம் நகரில் ஒரு ரோமானியனைப்போல காட்சி அளி' என்ற ஆங்கில பழமொழிக்கு ஒப்ப இருந்தது!

அம்மன் தாலியே 'அபேஸ்'!

திருச்சி அருகில் உள்ளசிங்கபெருமாள் கோயில் தாயாரம்மன் சிலை மீதிருந்த 'புனிதத் தாலி', கடந்த டிசம்பர் 27-ந் தேதியன்று களவு போயிருக்கிறது!

உண்மைக்கதை

வட நாட்டில்—ஆக்ராவிற்கு அருகே, 'இந்தி சேனை'யைச் சேர்ந்த மாணவர்களில் சிலர், ஆங்கிலப் பெயர் பலகைகளையும், அரசாங்க எண்களையும் அழித்து விட்டு, அவற்றை இந்தியில் மாற்றி எழுதிக்கொண்டிருந்தனர்.

அதே நேரத்தில், வெளிநாட்டுக்காரர் ஒருவர், அங்கே காரில் வந்துகொண்டிருந்தார்; இந்தி 'தேச பக்தர்'கள் அவரது காரை நிறுத்தி, 'காரில் பொறிக்கப்பட்டுள்ள ஆங்கில எண்களை அப்புறம்படுத்துங்கள்; இல்லேயேல்.....' என்று மிரட்டினர்!

வெளிநாட்டுக்காரருக்கு, 'ஆங்கிலம் வேண்டாம் வேண்டாமா' என்ற போராட்டத்தில் ஆர்வம் இருந்திடக் காரணமில்லே. அவர் தனது நலனேப் பாதுகாத்துக் கொள்வது எப்படி என்று சிந்திக்கத் தொடங்கினார்.

மறுபேச்சு பேசாமல், அவர் இந்தி சேனைக்காரர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்; ஆனால் மறுகணமே அவர் செய்த காரியம், அவர்களுக்கு வியப்பை மட்டுமல்ல—அதிர்ச்சியையும் அளித்தது!

கூட்டத்தின் முன்னிலையில் இருந்த ஒருவருடைய கைக்கடியாரத்தை வாங்கி, அதைச் சட்டென்று தொட்டுவிட்டு வீசி யெறிந்துவிட்டு, 'ஆமாம்; என்னுடைய காரில் இந்தி எண்கள் தான் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்; அதை நான் ஏற்புக் கொள்கிறேன்; ஆனால், நீங்களும் அராபிய எண்கள் பொறிக்கப்பட்டுள்ள அயல்நாட்டுக் கைக்கடியாரத்தை அணியக் கூடாது' என்று கூறினார்—அந்த வெளிநாட்டுக்காரர்.

—'டெக்கான் ஹெரால்ட்'

பிரெஞ்சுக்காரர்கள் பார்வையில்

இந்தியத் தலேமையமைச்சர்

பாராட்டுக்குரிய பாவையர் வரிசையில் இந்திராவுக்கு முதலிடம்

பாரிஸ் நகரில் நடந்த பொதுக் கருத்து வாக்கெடுப்பு ஒன்றின் முடிவின்படி, 'அதிகம் பாராட்டப்பட்ட பெண்கள்' என்ற வரிசையில், இந்தியத் தலேமையமைச்சர் இந்திரா, முதலில் வருகிறார்!

காலஞ்சென்ற அமெரிக்க அதிபர் கென்னடியின் மனைவி ஜாக்குலின், மூன்றாம் இடம் வகிக்கிறார்!

பிரபல திரைப்பட கவர்ச்சி நடிகை பிரிகேட் பார்டாட், நான்காவது வரிசையில் வருகிறார்!

பிரெஞ்சுப் பின்னணிப் பாடகி ஒருவர், இரண்டாவதாக அங்கம் வகிக்கிறார்!

ஏமாறப் போகின்றனர்!

'காலண்டர் பிரியர்'களுக்குப் புத்தாண்டு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுக்கப்போகிறது!

பெரிய பெரிய நிறுவனங்களும், விமானப் போக்குவரத்து நிறுவனங்களும் ஆண்டு தோறும் ஏராளமான காலண்டர்களே வெளியிட்டு வழங்குவது வழக்கம்; 'காலண்டர் பிரியர்'கள் அவற்றை யெல்லாம் ஆவலோடு சேகரித்துக் கொள்வார்கள்; ஆனால் இந்தப் புத்தாண்டில், இத்தகைய நிறுவனங்கள் அனேத்தும், காலண்டர்களே வெளியிடும் அளவை மூன்றில் ஒரு பங்காகக் குறைத்துக் கொண்டுவிட்டன; குறிப்பிடத்தக்க சில நபர்களுக்கு மட்டுமே காலண்டர்கள் வழங்கப்படும்.

தொழில், வர்த்தகத் துறைகளில் கடந்த ஆறு மாத காலமாக நிலத்துவரும் நஷ்டமே இந்தக் காலண்டர்கள் குறைப்புக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

தென்னக மாணவர்களின் உயிருக்கு ஆபத்து

காசிப் பல்கலேக் கழகத்தில் இந்தி வெறியர் அட்டூழியம்

காசிப் பல்கலேக்கழகத்தில் பயின்றுவரும் கேரளத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர், 'மாத்ரு பூமி' என்ற மலேயாள நாளிதழ் ஆசிரியருக்கு எழுதியுள்ள மடலின் மொழிபெயர்ப்பு இங்கு தரப்படுகிறது:—

மொழியின் பெயரால் வட இந்தியாவில் நடைபெற்றதும்—நடைபெற்றுக்கொண்டு வருவதுமான பல சம்பவங்களும் தங்களுக்குத் தெரிந்திருக்கலாமெனினும், 'மத்தியப் பல்கலேக் கழகம்' எனப் பெருமையாக நினேக்கதுக கொண்டிருக்கும் காசி இந்துப் பல்கலேக் கழகத்தில், தென்னாட்டு மாணவர்கள்மீது இங்குள்ள மொழிவெறியர் செய்த காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களாப் பற்றித் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர நாங்கள் விரும்புகிறோம்.

வட இந்தியாவில், 'ஆங்கில எதிர்ப்புப் போர்' வெடித்துக் கிளம்பியது இந்தப் பல்கலேக் கழகத்திலிருந்துதான் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

நவம்பர் 28, 29, 30 ஆகிய நாட்களில், இங்குள்ள தென்னாட்டு மாணவர்களுக்கு மறக்க முடியாத நாட்களாகும். முதன் முதலில் இப்போராட்டத்தில் பெரும்பாலான (வட இந்திய) மாணவர்கள் ஆர்வம் காட்டாமல் இருந்தனர்; ஆயினும், சில பல்கலேக் கழக நிர்வாகிகளுடையவும், ஆசிரியர்களுடையவும் தூண்டுதலின் மூலம், இது கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது!

நவ. 28-ம் நாள், எஞ்சினீயரிங் வகுப்பிலிருந்து திருமபி வந்த தென்னாட்டு மாணவர்கள், மூங்கில் கம்புகளாலும், ஹாக்கி மட்டைகளாலும் விரட்டிவிரட்டித் தாக்கப்பட்டனர்! பல மாணவர்களும் உயிருக்குப் பயந்து அன்றிரவு, விடுதிக்குள் தங்காமல் பல்கலேக்கழகத்திற்கு வெளியில் பாதுகாப்புத் தேடினர்.

இராமநிருஷ்ண, விவேகானந்தா, தன்வந்திரி முதலிய விடுதிகளில் தங்கியிருந்த தென்னாட்டு மாணவர்களும், வங்காளி மாணவர்களும் தாக்குதலுக்காளாயினர்.

மோட்டார்களின் எண்களே மாற்று மறுத்த ஆசிரியர் ஒருவரும் இந்தி வெறியர்களால் தாக்கப்பட்டிருக்கிறார்!

இப்பொழுதும், பல்கலேக் கழகத்தில் உள்ள தென்னாட்டு மாணவர்களும், ஆசிரியர்களும் மிகவும் பயந்தே காலந்தள்ளுகின்றனர்!

பல்கலேக் கழகத்திற்கு அதிகாரபூர்வமாக விடுமுறை அறிவிக்கவில்லே யெனினும், பெரும்பாலான மாணவர்களும், அவரவர்களின் இல்லங்களிலேயே பாதுகாப்புக்காக இருக்கின்றனர்.

பெரும்பாலான தென்னாட்டு மாணவர்கள், நவ. 28, 29-ம் நாட்களில் உயிருக்குப் பயந்து ஊரைவிட்டுச் சென்றுவிட்டனர்.

இப்பொழுது பேராசிரியர் ஒருவுக்கு அடங்கியிருப்பதாகத் தோன்றினாலும், அண்மையில் இங்கு நடைபெறப் போகும் இந்திய விஞ்ஞான மாநாட்டின் போது இந்தி வெறி உணர்ச்சி தலேதூக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

பல்கலேக்கழகத்தில் இருந்த எல்லா ஆங்கிலப் போர்டுகளும் தூள்தூளாக்கப்பட்டுவிட்டன!

தொடர்ந்து இங்கு படித்துக் கொண்டிருப்பதில் பல மாணவர்களும் அச்சம் கொண்டுள்ளனர்.

மத்திய நிர்வாகத்தில் நடந்து கொண்டு வரும் இந்தப் பல்கலேக்கழகத்தில் இந்தி மொழியினர் செய்துவரும் வெறித் தனங்களுக்கு எதிராகத் தாங்களும், தங்களது பத்திரிகையும் குரல் எழுப்புவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.''

இந்தி வெறியர்களுக்கு சரியான பாடம்!

வந்த கடிதத்தை திருப்பி அனுப்பியது கேரளம்

ஆலப்புழை, டிச. 29—

இங்கு ஐரோப்பியர் ஒருவர் நடத்திவரும் கயிற்றுத் தொழிற்சாலேக்குக் கடிதம் ஒன்று வந்தது; அவர்கள் அதைப் புரட்டிப் பார்த்து, ஒன்றும் புரியாமல் விழித்தனர்.

கடிதம், வாரணசியில் உள்ள வடபகுதி இரயில்வே தலேமை அதிகாரியின் அலுவலகத்திலிருந்து வந்திருக்கிறது என்றதை தவிர, யாராலும் வேறு ஏதும் புரிந்துகொள்ள முடியவில்லே!

இந்தி மொழியில் அச்சிடப்பட்டிருந்த அக்கடிதத்தைப் படித்தறியும் பொருட்டு, நிர்வாகத் தினர் பலரையும் அணுகினர்; ஆனால், யாருக்கும் இது புரியவில்லே!

கடைசியாக அனுப்பிய இடத்திற்கே அக்கடிதம் திருப்பி அனுப்பப்பட்டது!

"எங்களுக்கு இந்த மொழி புரியவில்லே; தயவுசெய்து மலேயாளத்திலோ, ஆங்கிலத்திலோ எழுதுங்கள்" என்ற ஒரு குறிப்பும் அத்துடன் இணேக்கப்பட்டிருந்தது!

நீதித் துறையே சீர்குலேந்துவிடும்

முன்னுள் நீதிபதி எச்சரிக்கை

பம்பாய், டிச. 29—

"ஆங்கிலத்துக்குப் பதில் வேறொரு மொழியோ அல்லது மொழிகளோ அதன் இடத்தில் அமர்த்தப்பட்டால், இந்தியாவில் நீதித் துறையின் அமைப்பு சீர்குலேந்துவிடும்"

என்று, முன்னுள் தலேமை நீதிமன்ற நீதிபதி கே. சுப்பா ராவ் எச்சரித்துள்ளார்.

உயர் நீதிமன்றங்களிலும், தலேமை நீதிமன்றத்திலும் ஆங்கிலத்தை நீடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"ஆங்கிலம், ஒற்றுமையை உருவாக்கும் சக்தியாக இருக்கிறது; அதை மாற்றுவது, வழக்கறிஞர் தொழிலின் ஒற்றுமையையே அழித்துவிடும்.

"நீதித் துறையின் மொழியை முடிவு செய்யவேண்டியது, 'மாலில அரசுகள்தான்' என்று கூறுவது சரியல்ல; உயர் நீதிமன்றங்களின் எல்லா அலுவல்களிலும் ஆங்கிலத்தைப் பயன்படுத்த அரசியல் சட்டத்தில் வழிகோலப்பட்டிருக்கிறது."

இந்தித் திணிப்பும் ச. சோ. கட்சியும்!

பிரச்சினே தீர எஸ். எம். ஜோஷி கூறும் காரணம்

"'விஷம்பாதவர்கள்மீது இந்தித் திணிக்கப்படாது' என ச. சோ. கட்சி தெரிவிக்கியுள்ளது.

"காங்கிரசு ஆட்சியின் தவருன கொள்கைகளின் காரணமாகவே இந்தி எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.

"மொழி மசோதா நிறைவேறி இரங்பதால், நிலேமைமற்றிப் புதிதாகப் பரிசீலித்துப் புதிய கொள்கையை வகுக்கவேண்டும்.

"நாடானுமன்றத்தில் எல்லாத் தேசிய மொழிகளுக்கும் சமவுரிமை தரவேண்டும்.

"ஒரே சமயத்தில், இந்தி—ஆங்கில மொழியெயர்ப்புக்கு ஏற்பாடு செய்யவேண்டும்; இது தொடர்பாக நான்கு தென்னிந்திய மொழிகளும் முன்னுரிமை பெறவேண்டும்.

"இந்தியை மத்திய ஆட்சிமொழியாக்க விரும்புபவர்கள், தங்கள் வட்டார மொழியுடன் ஒரு தென்னிந்திய மொழியைக் கற்கவேண்டும். இந்தி மாநிலங்களில் இதை உற்சாகமாகச் செய்தால், இந்தியை எதிர்ப்பவர்களின் ஆதரவைப் பெறப் பெரிதும் உதவும்."

—சம்புக்க சோஷலிஸ்டுக் கட்சி மாநாட்டுத் தலேமையுரையில்

படி அரிசித் திட்டத்தை மதிப்பிட்டுக் கூறுக!

பொருளாதார வல்லுநர்களுக்குத் தமிழக அரசு கோரிக்கை

சென்னை, டிச. 29—

"பொருளாதாரப் பிரச்சினேகளே அலசிப்பார்த்து, ஒளிவுமறைவின்றி தங்களுடைய கருத்துக்களேப் பொருளாதார நிபுணர்கள் வெளியிட வேண்டும்.

"ஊழிய உயர்வின் விளேவாக விலேவாசிகள் உயருகின்ற நிலேமையைச் சமாளிக்கும் நோக்கத்துடன், மானியமளித்து அரிசியை மலிவாக விற்கும் தமிழக அரசின் திட்டத்தைச் சரிவர மதிப்பிட்டுக் கருத்துரை கூறவேணடும்.

"'அச்சமின்றி -- ஒளிவுமறைவின்றி ஆலோசனே கூறும் அமைச்சர்களின் இல்லாத அரசு அழிந்துபடும்' என்ற மூதுரையை நினேவில் கொண்டு, தைரியமாகத் தங்கள் கருத்துகளேப் பொருளாதார நிபுணர்கள் எடுத்துக்கூற வேண்டும்."

—கல்வித் துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

(இந்தியப் பொருளாதார மாநாட்டின் பொன்விழாக் கூட்டத்தில்)

புதுவேடு

மொழிப் போராட்டம்--அங்கும் இங்கும்!

"(ஆட்சிமொழி பற்றி) வடக்கே நடந்த போராட்டத்துக்கும்—தெற்கே நடந்த போராட்டத்துக்கும் முக்கிய வேறுபாடு உண்டு.

"மசோதாவும், மொழி அறிவிப்புக் கொள்கையும் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டவுடனேயே வடக்கே போராட்டம் துவங்கப்பட்டது! மக்களவையில் மசோதா மீதான விவாதம் என்ன முடிவை அடையப்போகிறது என்பது வரையில்கூட, (வடக்கே உள்ளவர்கள்) காத்திருக்கவில்லே!

"ஆனால், மசோதா சட்டமான பின்னேரு, தெற்கே எதிர்ப்புப் போராட்டம் நடந்தது! அதுவும், சட்டம் கொண்டுவந்துள்ள புறக்கணிக்கப்பட்ட போக்குகளே நன்குஆதீர ஆலோசித்து உணர்ந்து பின்னரே!"

—'இந்து' (28—12—67) இதழில்
கே. ரங்கசாமி

அவசரநிலேச் சட்டத்துக்குப்பதில் பிரிவினே தடைச்சட்டம்

எதிர்க்கட்சியினரைஒடுக்க டில்லி அரசின் ஆயுதம்

புதுடில்லி, டிச. 29—

ஐந்தாண்டு காலமாக இருந்து வரும் அவசர நிலேச் சட்டம் ரத்து செய்யப்படுவதும், சேக் அப்துல்லாவுக்கு முழு விடுதலே வழங்குவதும் புத்தாண்டுச் செய்திகளாக அமையுமென்று இங்குள்ள நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

அண்மைக்காலமாக மொழி சம்பந்தமாகவும், மேற்கு வங்க நிலவரங்கள் காரணமாகவும் நாட்டில் வன்முறைச் செயல்கள் பெருகி விட்டபோதிலும், அவற்றை ஒடுக்க அவசர காலச் சட்டப்படி நடக்கவேண்டிய அவசியம் அரசுக்கு வரவில்லே.

அண்மைக்கால வன்முறைகளே அடக்கப் பாதுகாப்புச் சட்டத்திலுள்ள கடுமையான விதிமுறைகள் எதனேயும் அரசாங்கம் கடைபிடிக்கவில்லே என்பதை உள்துறை அமைச்சகம் சுட்டிக் காட்டியது.

சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளத் தடுக்கும் மசோதா மூலம் பிரிவினேச் சக்திகளே ஒடுக்குவதற்கான அதிக அதிகாரங்களேப் பெற முடியுமென அரசு கருதுகிறதாம்.

நான்காவது பொதுத் தேர்தலுக்கு முன்பு பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் காங்கிரசல்லாத பல கட்சிகளேச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டது நினேவிலிருக்கலாம்.

தமிழ்நாட்டில் மாணவர்களின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நிகழ்ந்தபோது அப்போதைய முதலமைச்சர் பக்தவத்சலம், பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி மாணவர்களேக் கைது செய்ததும், அதன காரணமாகத் தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சிக்குத் தோல்வி தேடிக் கொடுத்ததும் அனேவரும் அறிந்ததாகும்.

அவசரகால நிலேமையை ரத்து செய்யக் கோரி பல்வேறு தரப்புகளேச் சேர்ந்தவர்களும் ஒருமனதாக வற்புறுத்தி வந்தும், காங்கிரசு மட்டும் அக்கறை காட்டாமல் இருந்தது; ஏனெனில், காங்கிரசு அடிமைத் தட்சிகளேச் சார்ந்தவர்களமீது பிரயோகிப்பதற்கேற்ற ஓர் ஆயுதமாக அவசர நிலேயை அது கருதி வந்தது; ஆனால் இப்போது பல்வேறு மாநிலங்களிலும் காங்கிரசு சிறுபான்மையாகிவிட்டதாலும், மத்தியிலும் அதற்கு வலிமை குன்றிவிட்டதாலும், அவசரகால நிலேயை மேலும் நீடிக்கமுடியாத நிலேக்குக் காங்கிரசு ஆளாகிவிட்டது!

பெரியார் வழங்கிய பரிசு !

"இன்று பெரியாரவர்கள், எனக்குப் பொன்னாடை போர்த்தினார்கள்; உண்மையாகவே இது எனக்குப் பெருமைதான்.

"இதைவிடப் பெருமையாக நான் கருதுவது—பெரியாரவர்களுக்கு நினைவிருக்கிறதோ, என்னவோ—எனக்கு ஈரோட்டில் முதன் முதலில் நகராட்சியில் வரவேற்புத் தரச் செய்து பொன்னாடை போர்த்தினார்கள்; அதை நான், என்வாழ்நாளில் மறக்க முடியாது!

"எனக்கு முதன்முதலில், 'வரவேற்பு' என்பதே, ஈரோடு நகராட்சியில் தரப்பட்டது தான்; அதன்பின், இப்போது நிறைய வரவேற்பு தருகிறார்கள் என்றால், அவை, எனக்காக அல்ல—பதவிக்காகத் தரப்படுவதே ஆகும்.

"பெரியாரவர்கள், இடையிலே சில ஆண்டுஉள், எனக்குத் தரவேண்டிய பரிசுகளையெல்லாம் தாராமல் ஏமாற்றிவிட்டார்கள்!"

--அறிஞர் அண்ணா
(நாகரசம்பட்டியில், பெரியார் இராமசாமி கல்விநிலையத்தின் புதியகட்டிடத் திறப்புவிழாவில்)

திருவில்லிபுத்தூர் அண்ணா மன்றம்

திருவில்லிபுத்தூர் அண்ணா மன்றத்தின் நிர்வாகிகள் தேர்தல் எஸ். மகபூப் தலைமையில் நடந்தது. எஸ். டி. கோமுது தலைவராகவும், எஸ். மகபூப் செயலாளராகவும், எஸ். பி. செயராசு பொருளாளராகவும், வெ. திருப்பதி உள்ளிட்ட 8-பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதுவை அண்ணா மன்றம்

17—12—67 அன்று புதுவை வட்டச் செயலாளர் – கிளைக் கழகச் செயலாளர் ஆகியோரின் அனுமதியுடன் பூமியான்பேட்டை கிளைக் கழகச் செயலாளர் கே. தங்கராசு தலைமையில், அண்ணா மன்ற அமைப்புக் கூட்டம் நடைபெற்றது; அதுபோது, கீழ்க்காணும் தோழர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர் : டி. சிங்காரவேலு; செயலாளர் : பு. விசுவநாதன்; துணைச் செயலாளர் : ஏ. ஆரோக்கியசாமி; பொருளாளர் : பி. தங்கவேலு; துணைப் பொருளாளர் : கெ. பி. தட்சணாமூர்த்தி; மற்றும் 10 பேர் செயற்குழுவினர்.

சென்னை 100-வது வட்ட எம்.ஜி.ஆர். மன்றம்

சென்னை 100-வது வட்டம் எம்.ஜி.ஆர். மன்ற நிர்வாகிகள் தேர்தல் தோழர். சி. பாண்டுரங்கம் தலைமையிலும் – வட்டச் செயலாளர் அ. சந்தானம் முன்னிலையிலும் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—தலைவர் : ம. கோபால்; துணைத் தலைவர் : எம். இராசு; செயலாளர் : மா. தென்னவன்; துணைத் தலைவர் : எம். இராசு; செயலாளர் : மா. தென்னவன்; துணைச் செயலாளர் : ஏ. பிரகாசம்; பொருளாளர் : பி. கண்ணன். மற்றும் 13 பேர் செயற்குழுவினர்.

சென்னை 6-வது வட்ட இளங்கோ கலை மன்றம்

சென்னை 6-வது வட்டட இளங்கோ கலை மன்றத்தின் நிர்வாகிகள் தேர்தல் கிளைக் கழக அவைத் தலைவர் ப. மோகனவேலன் தலைமையில், 17—12—67-ல் நடந்தது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

அவைத் தலைவர் : சி. கன்னியன்; செயலாளர் : கோ. கு. சேகர்; துணைச் செயலாளர் : தி. இமயவரம்பன்; பொருளாளர் : பொ. கமலக்கண்ணன்; காப்பாளர் : பு. இளமாறன்.

கிருட்டினராயபுரம் தொகுதியில் அமைச்சர் சாதிக் பாட்சா

பொதுமக்கள் வரவேற்பு --- பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

கரூர், டிச. 26—

14—12—67 காலை கரூருக்கு வருகைதந்த சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள், காலை 10 மணியளவில், தந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் வேளாண்மைக் கிடங்கைத் திறந்துவைத்து, பின்னர், வேளாண்மைக் கண்காட்சியினத் திறந்துவைத்தார்.

பின்னர், தாந்தோணி பொதுமக்கள் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்புப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார்; தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் சொன்தரபாண்டியன், கூட்டத்துக்குத் தலைமைதாங்கினார்.

அடுத்து, செல்லாண்டிபட்டி வாஞெலி நிலையக் கட்டிடத் திறப்பு விழா—ஏழாச் ஊராட்சி வரவேற்பு—வெள்ளியணை குடும்பக் கட்டுப்பாட்டுப் பயிற்சி முகாம்—வெள்ளியணை மாணவர் இலக்கிய மன்றம்—பாச்சிப்பட்டி, பொதுமக்கள் வரவேற்பு — ஆகிய நிகழ்ச்சிகள் முடிந்த பின், சாலியானூர் தோழர் தங்கவேலு இல்லத்தில் பகல் உணவு உண்டார்.

சிறிது நேர ஓய்வுக்குப் பின், கரூர் ஆலைத் தொழிலாளர் சங்கச் சார்பில் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்; தோழர் இரத்தினவேலு தலைமைதாங்கினார்; தோழர் கொண்டையப்பன் வரவேற்றார்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்; சட்டமன்ற உறுப்பினர் சொன்தரபாண்டியன் உரையாற்றினார்.

அடுத்து மாலை 4 மணியளவில் சணப்பிரட்டி ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடத்தை அமைச்சர் திறந்துவைத்தார்; காங்தியார், திருவள்ளுவர் ஆகியோர் உருவப் படங்களை முறையே கே. ஆபூர். நல்லசிவம் எம்.எல்.ஏ., சொன்தரபாண்டியன் எம்.எல்.ஏ. ஆகியோர் திறந்துவைத்துப் பேசினர்.

கரூர் உடற்பயிற்சி ஆசிரியர் அமிர்தம் அவர்களுக்கு அமைச்சரால் பாராட்டுதழ் வழங்கப்பட்டது.

பின்னர் புலியூர் ஊராட்சி மற்றும் பொதுமக்கள் வரவேற்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட பின், உபபிடமங்கலம் வருகைதந்தார்; அங்கு தி.மு.க. சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சிக்கு கிளைக் கழகச் செயலாளர் எஸ். வி. பெரியசாமி தலைமைதாங்கினார்.

அடுத்து உபபிடமங்கலம் பேரூராட்சி வரவேற்பினும் கலந்துகொண்டு இரவு 7 மணிக்கு வெள்ளியணையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார்; வட்டச் செயலாளர் ஆர். எஸ். இராமசாமி தலைமை தாங்க—தோழர்கள் வதிபம் முத்துசாமி, குளித்தலை முத்துகிருஷ்ணன், வெ. சொன்தரபாண்டியன் ஆகியோர் பேசினர்.

பின்னர், அமைச்சர் அரியதோர் உரையாற்றினார்.

இறுதியாக, கரூர் நகர தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் தலைமைதாங்கினார்; தோழர்கள் பரமதநிதி சண்முகம், கனகராஜ் பி.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., சொன்தரபாண்டியன் எம்.ஏ.பி.எல்., எம்.எல்.ஏ., நகரச் செயலாளர் என். ஆர். இராமசாமி, வட்டச் செயலாளர் ஆர். என். இராமசாமி, பெரியார் விநிதி நல்லசாமி, குளித்தலை வட்டச் செயலாளர் முத்துசாமி ஆகியோர் பேசிய பின், அமைச்சர் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

ஆசிரியர்களில் பலவிதம்!

"பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் பகுத்தறிவாதிகளாக இருக்கவேண்டுமென்றால், ஆசிரியர்கள் பகுத்தறிவாதிகளாக அமையவேண்டும்.

"ஒரு உதாரணம் கூறவேண்டுமானால், 'கற்க கசடற கற்றவைக் கற்றபின், நிற்க அதற்குத் தக' என்பது குறள்.

'இதற்கு பகுத்தறிவுள்ள ஆசிரியர ஒருமாதிரியான கருத்தையும், வைதீக மனப்பான்மையுள்ள ஆசிரியர் ஒருவிதக் கருத்தையும் சொல்லுவார்கள்.

"பகத்தறிவுள்ள ஆசிரியராக இருந்தால், அக்குறளுக்கு, 'உங்கள் மனதிலிருக்கின்றதை அறியாமை என்கிற அழுக்குப்போக படியுங்கள்; இலக்கியங்களை—மேலோட்டமுடுக்கியங்களை—சரித்திரங்களை—விஞ்ஞான நூல்களைப் படியுங்கள்; படித்தபின், அதில் சொல்லி யிருக்கின்றவைகளை உங்கள் அறிவு கொண்டு சிந்தித்து, அதன்படி நடந்து கொள்ளுங்கள்' என்று பொருள் கூறுவார்.

"அதே குறளுக்கு வைதீக மனப்பான்மையுள்ள ஆசிரியர், 'நீங்கள் முன் ஜென்மத்தில் செய்த பாவ அழுக்குப் போகும்படியாக, இராமாயணம்—பாரதம் போன்றவைகளைப் படியுங்கள்; அவற்றில் சொல்லியிருக்கின்றபடி நடந்துகொள்ளுங்கள்; அதுதான் நீங்கள் செய்த பாவத்தைப் போக்கும்' என்று இப்படியும் அவர் விளக்கம் கூறலாம்.

"நமது நாட்டிற்குப் புதிய முறைகளில் கருத்துகளைச் சொல்லக்கூடிய ஆசிரியர்கள் நிறையத் தேவை!"

--அறிஞர் அண்ணா
(நாகரசம்பட்டியில்)

சென்னை 80-வது வட்ட கருணாநிதி நற்பணி மன்றம்

3—12—67-ல், கிருட்டிணம் பேட்டை—நடுக் குப்பம் முதல் தெரு, 9-எண்ணுள்ள இல்லத்தில், கலைஞர் கருணாநிதி நற்பணி மன்ற நிர்வாகிகள் தேர்தல், வட்டச் செயலாளர் எஸ். ஆனந்தன் அவர்கள் ஆணையாளராகக் கொண்டு, நடைபெற்றது:—

அவைத் தலைவர் : எச். டி. இராசன்; செயலாளர் : ச. தண்டபாணி; துணைச்செயலாளர் : டி. சண்முகம்; பொருளாளர் : சி. துரைக்கண்ணு; மற்றும் 11-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

பெரியூரில் கழகப் பொதுக்கூட்டம்

பெரியூர் அண்ணா திடலில் 7—12—67-ல் ஓர் பொதுக்கூட்டம் தோழர் பழனிசாமி தலைமையில் நடைபெற்றது.

கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி, குன்னத்தூர் க. அன்பரசு, அத்தானிபாளு, ஈரோடு ப. ச. விசுவநாதம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை 70-வது வட்ட கருத்துரை மன்றம்

சென்னை 70-வது வட்டம் கருத்துரை மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல் தோழர் சி. சோமசுந்தரம் அவர்கள் ஆணையாளராகக் கொண்டு நடைபெற்றது :-

தலைவர் : எம். எஸ். ஜெயவேலு; செயலாளர் : டி. எஸ். பாண்டியன்; துணைச்செயலாளர் : டி. ஜோசப்; பொருளாளர் : எம்.எஸ். தனிமகமணி; மற்றும் ஐந்து பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

கட்டிடங்கள் விழுங்கும் பணம்!

கல்விச் செலவுக்குப் பயன்பட வழிசெய்வோம் !

"நம் நாட்டில் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கென்று நிறையப் பணம் செலவிடும் நிலை இருக்கிறது; மற்ற நாடுகளில்—வெளி மாநிலங்களில்—கட்டிடத்திற்காக இவ்வளவு பொருள் செலவிடுவது கிடையாது!

"நாம் கட்டிடங்களுக்கு கட்டச் செலவிடுவதில், டில்லியில் கூட மூன்றில் இரண்டு பாகத்தினை கட்டிடம் கட்டுவதற்குச் செலவிடுகிறார்கள்; ஐந்தாண்டு திட்டங்களில் வெறும் கட்டிடங்களைக் கட்டுவதற்கு மாத்திரம் ரூ. 1,500 கோடியை இந்திய அரசு செலவிட்டிருக்கிறது!

"கட்டிடம் கட்டுவதற்குப் போடும் மூலதனத்தைக் கொண்டு புது புது தொழிலகளை அமைக்கலாம்.

"நம்முடைய கட்டிடக் கலைஞர்களும், பொறியியல் வல்லுநர்களும் சிறந்து, 'ஐந்த வகையில் செலவினைக் குறைக்க முடியும்' என்பதை ஆராய்ந்து, செலவைக் குறைக்க முயற்சிக்க வேண்டும்.

"சென்னை தீவிபத்து நிதிக்காக வருவான ரூ. 33 இலட்சம் என்னிடம் இருக்கிறது; அதில் இதுவரை ரூ 15 இலட்சம்தான் செலவிட முடிந்திருக்கிறது; காரணம் செங்கல் கிடைப்பதில்லை; கேட்டால், 'எல்லாம் கொடுத்தாகிவிட்டது' என்று சூளைக்காரர்கள் சொல்லிவிடுகிறார்கள்!

"100-க்கு 90 பேர்—பெரியார் அவர்கள் சொன்னதுபோல்—பொதுநல உணர்ச்சி இல்லாதவர்களாகவே இருக்கின்றனர். அதே செங்கல் சூளைக்காரரிடம் கண்டிராக்டர்களை அணுகினால், 'கண்ட்ரோல்' விலைக்கு அதிகமான விலைக்குக் கொடுக்கத் தயாராக இருக்கின்றனர்; கேட்ட அளவு கொடுக்கின்றனர்.

"கட்டப்பட வேண்டிய வீடுகள் கொடுக்கணக்கில்---ஆலட்சக் கணக்கில் இன்னும் பாக்கி இருக்கிறது; கற்கள் கிடைப்பதில்லை!"

--அறிஞர் அண்ணா
(நாகரசம்பட்டியில்)

சென்னை 98-வது வட்ட திருவள்ளுவர் மன்றம்

சென்னை 98-வது வட்டத்தைச் சேர்ந்த திருவள்ளுவர் மன்ற நிர்வாகிகள் தேர்தல், வட்டச் செயலாளரும் துணை மேயருமான சி. பி. பலவன்னன் தலைமையில்—தியாகராயநகர்ப் பகுதி துணைச் செயலாளர் திரு. சுந்தரம் முன்னிலையில் நடைபெற்றது; அது போது கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர் : ப. வீரபூத்திரன்; துணைத் தலைவர் : நா. சண்முகம்; செயலாளர்: கோ. வெங்கடேசன்; துணைசெயலாளர் : மா. ந. ஆறுமுகம்; பொருளாளர் ; ப. சு. மணியன்; 16-பேர் செயற்குழு உறுப்பினர்கள்.

சென்னிமலை தி.மு.க. கூட்டம்

சென்னிமலை என்.பி.என் நகரில் தி. மு. க. சார்பில் 5—12—67-ல் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் கே. அய்யாவு தலைமைவகித்தார். தோழர்கள் குன்னத்தூர் க. அன்பரசு, கே. இரத்தினம், ஏ. எஸ். சாமி, செ. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பகைத்தெழுந்த அந்தக் காலத்தில்!

"ஒருமுறை பெரியாரும், நானும், ஈரோட்டுக்குப் பக்கத்தில் ஈங்கூர் என்னும் கிராமத்தில் சுயமரியாதைப் பிரசாரத்திற்காகச் சென்றோம்; அந்த ஊரில் இருந்த பெரிய மனிதர் ஒருவர், நாங்கள் பேசிய இடத்திற்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, அந்த ஊரில் உள்ள மற்றவர்களைவிட்டு, நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம் இடத்தில் காற்றடிக்கும் பக்கம் பார்த்து சாம்பல் தூவிக்கொண்டே இருக்கும்படிச் சொன்னார்; பெரியாரும் பேசிக்கொண்டே இருந்தார்.

"நான் பேசும்போது குறிப்பிட்டேன்—'சாம்பலைத் தூவிக் கொண்டே இருக்கிறீர்கள்; அது பெரியாரை என்ன செய்யும்?—தாடியிலே படலாம்; அது ஏற்கனவே வெள்ளை; அதனால் எந்தக் கெடுதலும் வராது' என்று!

"இப்போது பெரியார் பேசும் பேச்சுகளை கேட்டால், ஒரு கனம் மயக்கம் வருகிறது; அடுத்து, ஒருவரையொருவர் சந்தித்துப் பேசும்போது, 'நியாயம்தான்; தேவைதான்' என்ற எண்ணம்தான் வருகிறதே தவிர, அதைக் கேட்டஉடனே பதறிய காலம்—பகைத்து எழுந்த காலம்—'இவர்களைப் படுகொலை செய்துவிடலாமா' என்று பேசிக்கொண்டிருந்த காலம்—ஆகிய இந்தக் காலங்கள் எல்லாம், அந்தக் காலங்களாகிவிட்டன! இப்போதிருக்கும் காலம், மிகப் பக்குவம் நிறைந்த காலம்!"

--அறிஞர் அண்ணா
(நாகரசம்பட்டியில்)

ஆலந்தூர்நகர் தி.மு.க. குழு அமைப்பு

3—11—67-ல், பழவந்தாங்கலில் தைதை வட்ட தி. மு. க. செயலாளர் சி. இராமலிங்கம் தலைமையில் ஆலந்தூர் நகராட்சிக்கு உட்பட்ட தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது; அவ்வமயம், ஆலந்தூர்—ஆதம்பாக்கம்—பழவந்தாங்கல்—நங்கநல்லூர் ஆகிய ஊர்க் கிளைகள் இணைந்து ஆலந்தூர் நகரக் கழகமாக அமைக்கப்பட்டது.

ஆலந்தூர் நகராட்சித் தேர்தல் அண்மையில் நடக்க இருப்பதால் நகர தி. மு. கழக நிர்வாகிகள் தேர்தல் நடக்கும் வரையில் செயலாற்ற ஓர் குழு அமைக்கப்பட்டது.

குழுவின் தலைவராகத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், உறுப்பினர்களாக சைதை வட்டச் செயலாளர் சி. இராமலிங்கம், ஆலந்தூர் எஸ். பாலன், ஆதம்பாக்கம் டி. எஸ். மாணிக்கம், பழவந்தாங்கல் பி. என். இராமகிருஷ்ணன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நகராட்சிக்குட்பட்ட துணை அமைப்புகளில், மேற்படி குழுவின் அனுமதி பெற்று கழக நடைமுறைகளுக்கேற்ப நடக்க வேண்டுமென்றும், குழுவின் நடவடிக்கையை வட்டச் செயலாளர் சி. இராமலிங்கம் கவனித்துக்கொள்வார் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இரங்கல்

வல்லம்படுகை தி. மு. க. கிளையின் செயலாளர் வைத்திநாதசாமி அவர்களின் மனையியார் திருமதி கோவிந்தம்மாள், 16—12—67 அன்று இயற்கையெய்தினார். தி. மு. கழகத்திற்கு அரும் பணி ஆற்றிய பெண்மணிகளில் இவ்வமையாரும் ஒருவர். அவருடைய மறுவரவு வருந்தும் நண்பர்களுக்கும், அவர்தம் குடும்பதாருக்கும் கிளைக் கழகச் சார்பில் அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகரில் நடைபெறும் ஊர்வலக் காட்சி--

உலகத் தமிழ் மாநாட்டு மாட்சி!

சென்னை, டிச. 30—

சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாடு குறித்து, அமைச்சர் கருணாநிதி அவர்கள், செய்தியாளர்களிடம் விளக்கமளித்தார்.

மாநாட்டையொட்டி நடைபெறவிருக்கும் ஊர்வலம், அதற்கான ஏற்பாடுகள்—சிலைத் திறப்பு விழா, பொருட்காட்சி, மற்றும் அலங்கார ஏற்பாடுகளையெல்லாம் விளக்கினார்.

மாநாட்டு ஊர்வலத்தில் அலங்கரிக்கப்பட்ட 27 ஊர்திகள் வரும்; ஓர் ஊர்திக்கும் மற்றோர் ஊர்திக்கும் இடையே இரு நூறு போ வீதம் சீருடையணிந்த சீரணியினர்—மாணவர்கள், ஆசியோர் அணிவகுத்து வருவர்.

ஊர்வலம் 3—1—68 பிற்பகல் 2-45 மணிக்குத் தீவுத் திடலிலிருந்து புறப்பட்டு, மவுண்ட் ரோடில் ஜெமினி ஸ்டூடியோவரை சென்று அங்கிருந்து திரும்பி எட்வர்டு எலியட்ஸ் ரோடு வழியாகச் சென்று காந்தி சிலைக்கு அருகே வடக்கில் திரும்பி மெரீனு வழியாகச் சென்று மீண்டும் தீவுத் திடலை அடையும்.

ஊர்வலம் செல்லும் வழியின் நீளம் 5 மைல் 1 பர்லாங்; ஊர்வலத்தின் நீளம் 6½ பர்லாங் அளவுக்கு இருக்கும்.

ஊர்வலத்தின் முன்னே அலங்கரிக்கப்பட்ட யானைகள் ஒன்றன் பின் ஒன்றாக வரும்.

அதனையடுத்து 27 அலங்கார ஊர்திகள் வரும்.

1. முதல் ஊர்தியில் பழனி தேவஸ்தான நாதசுரப் பள்ளி மாணவர்கள் அமர்ந்து நாதசுரம் வாசித்துக்கொண்டு வருவர்; அதனையடுத்து வரும் ஊர்திகளின் விவரம் :—
2. தமிழ்த் தாயும் செல்வங்களும்
3. திருவள்ளுவர் கண்ட தமிழகம்
4. வழக்குரைத்த கண்ணகி
5. பரத நாட்டியம்
6. கம்பர் தரும் காட்சி
7. ஔவையார் --- அதியமான்
8. முல்லைக்குத் தேர்ந்த பாரி
9. கரகம்
10. ஆராய்ச்சி மணி
11. தமிழுக்குத் தலைகொடுத்த குமணன்
12. மாமல்லபுரம்
13. காவடி
14. திருமுருகாற்றுப்படை --- நக்கீரர்
15. திருப்பாவை பாடிய ஆண்டாள்
16. யானை கட்டிப் போரடித்தல்
17. கிராமிய நடனம்
18. பூம்புகாரில் வாணிபம்
19. முரசு கட்டிலில் மோசிகீரனார்
20. கோட்டைப் போர்
21. கோலாட்டம், கும்மி
22. பாரதி --- பாரதிதாசன் --- கவிமணி
23. கப்பலோட்டிய தமிழர் --- வ. உ. சி.
24. தமிழ்த் தாத்தா -- மறைமலையடிகள் -- திரு. வி. க.
25. தமிழ் வளர்த்த மேல்நாட்டார்
26. பொய்க்கால் குதிரை
27. தங்க யானை வாகனம் -- தமிழ்த் திருவிழாக் கொடியுடன்

ஊர்வலத்தை, குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேனும், வெளிநாட்டினரும், மவுண்ட் ரோடு அரசினர் கலைக் கல்லூரி எதிரில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள மேடையில் அமர்ந்து கண்டுகளிப்பார்கள்.

பொதுமக்கள் வசதியாக நின்று ஊர்வலத்தைப் பார்ப்பதற்கு நடைபாதைகளில் வசதிகள் செய்யப்படுகின்றன.

தேமதுரத் தமிழுக்குத் திருவிழா--- தலைநகரில் பத்து நாள் பெருவிழா!

சென்னையில் நடைபெறும் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி சனவரி முதல் நாளிலிருந்தே நிகழ்ச்சிகள் துவக்கமாகின்றன.

முதல் நாள் துவங்கி பத்தாம் நாள் முடிய சென்னை நகரமே கோலாகலமாகக் காட்சியளிக்கவிருக்கிறது.

நாள்தோறும் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிய காட்சிகள்-தமிழ் மணக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன ; அவற்றின் விவரம் வருமாறு :---

முதல் நாள்

அண்ணா சிலைத் திறப்புவிழா

சனவரி முதல் நாள் மாலை 6-மணிக்கு மவுண்ட் ரோடு ரவுண்ட் டானாவில், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையை, டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) திறந்துவைப்பார்.

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அனைவரையும் வரவேற்பார்.

பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி சிலையை ஏற்றுக்கொண்டு நன்றி கூறுவார்.

இரண்டாம் நாள்

தமிழ்ச் சான்றோர் சிலைகள் திறப்பு

சனவரி 2-ம் நாள் மாலை 6-30 மணிக்குக் கடற்கரை காந்தி சிலை அருகில், தமிழ் வளர்த்த சான்றோர்க்கும், ஆன்றோர்க்கும் சிலை எடுக்கும் விழா நடைபெறும்.

சீர்சுரபி கோவிந்தராசனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இவ்விழா தொடங்கும்.

உலகத் தமிழ் மாநாட்டு அமைப்புச் செயலாளர் மு. ராா. பெருமாள் (முதலியார்) வரவேற்புரை வழங்குவார்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் சி. ஏ. இராமகிருஷ்ணன், சிலைகளை ஏற்றுக்கொண்டு நன்றி தெரிவிப்பார்.

விழாப் பந்தலில் சொற்பொழிவுகள் முடிந்தபின், சிலைத் திறப்பாளர்களும், மற்றவர்களும், கடற்கரையின் தென்கோடியில் அமைந்துள்ள வீரமாமுனிவர் சிலை முதலாகத் துறைமுக அலுவலகத்தின்முன் அமைந்திருக்கும் வ. உ. சி. சிலை ஈறாக உள்ள பத்துப்பேருடைய சிலைகளுக்கும் வணக்கம் செலுத்துவர்.

மூன்றும் நாள்

பொருட்காட்சித் திறப்பு

சனவரி 3-ம் நாள் காலை 9-மணிக்குப் பல்கலைக்கழகத் தேர்வு மண்டபத்தில் பொருட்காட்சித் திறப்பு விழா, திரு. டி. எம். சௌந்தரராசன் தமிழ் வாழ்த்துடன் துவங்கும்.

பொருட்காட்சிக் குழுத் தலைவர் திரு. சா. கணேசன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி (முதலியார்) தலைமையுரை நிகழ்த்துவார்.

இராஜாஜி திறப்புரை நிகழ்த்துவார்.

பொருட்காட்சிக் குழுச் செயலாளர் இரா. நாகசாமி நன்றி கூறுவார்.

சிறப்பு அஞ்சல் வெளியீடு

அந்த விழாவிலேயே, சிறப்பு அஞ்சல் தலை வெளியீட்டு விழாவும் நடைபெறும்.

தமிழக அஞ்சல் துறைத் தலைவர் திரு. எச். கே. ராவ் வரவேற்புரை நிகழ்த்துவார்.

டாக்டர் எம். ஏ. முத்தையா செட்டியார், அஞ்சல் வில்லையை வெளியிடுவார்.

முதல் அஞ்சல் வில்லையை முதலமைச்சர் அண்ணா வாங்கிக்கொள்வார்.

பொதுத் துறைத் துணைச்செயலாளர் டி. வி. வாசுதேவன் நன்றி கூறுவார்.

புலவர் குழுவிற்கு வரவேற்பு

தமிழகப் புலவர் குழுவிற்குத் தீவுத் திடலில், அன்று முற்பகல் 11 மணிக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

தொடக்க விழா

அன்று மாலை 6-30 மணிக்கு கடற்கரை காந்தி சிலை அருகில் உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க விழா நடைபெறும்.

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கும்.

சென்னை மாநகராட்சியின் சார்பில் மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் வரவேற்புரை நிகழ்த்துவார்.

வரவேற்புக் குழுத் துணைத் தலைவர் திரு. இரா. நெடுஞ்செழியன், செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, மலர் அமைப்புக் குழுத் தலைவர் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், பன்னாட்டாய்ச் தமிழ் ஆராய்ச்சிக் கழகத் தலைவர் பேராசிரியர் பிலியோசா ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்துவர்.

உலகத் தமிழ்க் கருத்தரங்கு அழைக்குநர் திரு. அ. சுப்பையா வாழ்த்துச் செய்தியைப் படிப்பார்.

திருக்குறள் ஆராய்ச்சிக்கு நிதியளிப்பு

திருக்குறள் ஆராய்ச்சிக்காக திரு. கே. ஏ. மதியழகன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், உள்ளாட்சி அமைச்சர் திரு. மா. முத்துசாமி மதுரைப் பல்கலைக் கழகத்திற்கும், பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் நிதி வழங்குவர்.

ஐக்கிய நாட்டு அமைப்புக் கல்வி—அறிவியல்—பண்பாட்டு நிறுவனத்தின் தலைமை நெறியாளர் திரு. மா. ஆதிசேஷையா, இலங்கை உள்ளாட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம், மலேசிய அரசு அஞ்சல் பொதுப்பணி அமைச்சர் திரு. சம்பந்தம், சிங்கப்பூர் வெளிநாட்டு அமைச்சர் திரு. இராசரத்தினம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

தமிழகக் கவர்னர் சர்தார் உஜ்ஜல் சிங், மலர் வெளியிடுவார்.

குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் தொடக்க உரை நிகழ்த்துவார்.

முதலமைச்சர் அண்ணா தலைமையுரை நிகழ்த்துவார்.

உலகத் தமிழ் மாநாட்டு அமைப்புச் செயலாளர் மு. ராா. பெருமாள் (முதலியார்) நன்றி கூறுவார்.

மாலை 4 மணிமுதல் விழா தொடங்கும்வரை திருவிடைமருதூர் வீ நசாமிப்பிள்ளை குழுவினர் நாதசுர இசை விருந்தளிப்பர்.

தொடக்க விழா முடிந்தது, அறுபது நாதசுர கலைஞர்கள் இசை விருந்தளிப்பர்.

அதே நேரத்தில் வாண வேடிக்கையும் நடைபெறும்.

தீவுத் திடலில் காலையிலிருந்து மாலைவரை இலக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

ஒளி---அலங்கார ஏற்பாடு

மாநாட்டினையொட்டி நகரிலுள்ள கடைகளிலும், வீடுகளிலும், தோரணங்கள்—வண்ண ஒளி விளக்குகளால் அலங்கரிக்குமாறு மாநாட்டுப் பொதுமக்கள் தொடர்புக் குழுத் தலைவர் அமைச்சர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சிறந்த முறையில் அலங்காரம் செய்வோருக்கு மூன்று பரிசுகள் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

பூம்புகாரில்...

உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு, பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலும், அண்ணாமலை மன்றத்திலும் நடைபெறும்.

இவற்றையொட்டி தீவுத் திடலில் பூம்புகார் நகர் உருவாக்கப்படுகிறது. இந்தப் பூம்புகாருக்குள்ளேதான், தமிழறிஞர்களின் சொற்பொழிவுகள், கவியரங்குகள், பட்டிமன்றம் ஆகியவைகளும், இன்னிசை, கலை நிகழ்ச்சிகளும், நாடகங்களும், இன்னபிற கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

குழந்தைகளுக்கான வேடிக்கைக் காட்சிகளும் உண்டு.

பூம்புகார் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க ஒரு நாளைக்கு ஆடவருக்கு 50 காசுகள், பெண்டிருக்கு 25 காசுகள் கட்டணமாக வைக்கப்பட்டுள்ளது.

ஏழு நாட்களுக்கு மொத்தமாக டிக்கெட் வாங்கினால் ஆடவர் ரூ. 2 50-ம், பெண்டிர் ரூ. 1.50-ம் கொடுத்தால் போதும்.

வானொலியில் இரா. நெடுஞ்செழியன்

தமிழகக் கல்வியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நாளை (ஞாயிறு) இரவு 9-மணிக்கு, சென்னை வானொலியில் உலகத் தமிழ் மாநாடுபற்றி உரை நிகழ்த்துகிறார்.

குழுக் கூட்டம்

கடையநல்லூர் நகர தி. மு. க பொது உறுப்பினர் கூட்டம் 31—12—67 இரவு 7-மணிக்கு முத்துக்கிருட்டிணபுரம் ரத்ன கட்டிடத்தில் நடைபெறும்; கழக உறுப்பினர்கள் இதனையே அழைப்பாகக் கொண்டு கலந்துகொள்ளுமாறு செயலாளர் சி. நடராசன் கேட்டுக்கொள்கிறார்.

பாலர் அரங்கம்

டிச. 31-ந் தேதி மாலை 4 மணிக்கு

சிறுவர் கலை நிகழ்ச்சி

(மொக்குரி குழந்தைகள் சங்கத்தினர்)

கட்டணம் வழக்கம்போல்

நாளிட்ட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆசிரியராகவும், செளிந்தியம் ராகவும், அச்சுப்பதிப்பாகவும் கொண்டு, அமுதம் அச்சகத்தில் (24, ஆர்மேனியர் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிட்டார்.